1737
4559
37

உ
ஓம் நமசிவாயம்.


# திருமருதூர் என்னும்
# நயினர்கோவில்
# ஸ்தல வரலாற்றுச் சுருக்கம்.

★

தொகுப்பு:
K. B. சுப்ரமணியம்
இராமநாதபுரம்.

★

முகவை பதிப்பகம்.
வெளியீடு.




K.B.S Mani RAMNAD.

ஓம்—நமசிவாயம்.

4559
Q23:3844137
Jo.

## தெய்வத் தமிழ்ப் பெரியோர்களே!

### வணக்கம்.

பரந்த உலகில் பரத கண்டம் என்றுமே ஓர் தனிச்சிறப்புடையது. அதிலும் தக்ஷிண தேசமாகிய நந்தமிழ்நாடு உலக இருளையே அகற்றவந்த அழிவில்லா ஓர் ஒளிச்சின்னமாகும். இந் நாட்டில் வதியும் மக்கள் அறிவு, ஆற்றல், திறமை, பக்தி, வீரம், வைராக்கியம், ஒழுக்கம், வழிபாடு இத்தனைக்கும் இலக்கான அதியற்புத ஜீவ சிருஷ்கடிள் என்பதை எத்தனையோ பழம்பெரும் புராணங்களும், இதிகாச இலக்கணக் காவியங்களும், சாத்திர சரித்திரங்களும் சிலாகித்து எடுத்துக்காட்டுகின்றன. தெய்வ நம்பிக்கையில் சிறப்புடன் வாழ்ந்து நற்பயனடைந்த நம் முன்னோர்கள் வழிவந்த சந்ததியார் நாம் என்று சொல்லிக்கொள்ளும் பெருமையின் அளவை உலகம் பெரிதும் மதிக்கிறது. காரணம் தெய்வ பக்தியும் நம்பிக்கையுமே. இவைகளின் உண்மைகளை இன்றளவும் காணலாம். உதாரணமாக திருமருதூரெனும் நயினார் கோவிலிலுள்ள திவ்ய க்ஷேத்திரத்தில் வருடந்தோறும் வைகாசியிலும், ஆடியிலும் நடைபெறும் உற்சவ காலங்களில் மதப்பாகுபாடற்றுக் கூடும் மக்களின் ஆர்வத்தையும், பக்தி சிரத்தையைம் பார்த்தால் தெய்வ நம்பிக்கையால் வாழும் நம் மக்களின் பெருமை தெரியும். உயிர் வாழும் ஜீவன் முதல் உப்புவரையிலுமுள்ள பொருள்கள் கணக்கற்ற எண்ணிக்கையாகக் குவியும் காக்ஷி ஒன்றே கடவுளின் கடாக்ஷம் பெற்ற நின் அறிகுறி என்பது நன்கு விளங்கும். தீராத பிணிகள் தீர்ந்ததாலும் அகலாத குறைகள் அகன்றதாலும், நேர்மையான காரியங்கள் நினைத்தபடி நடந்ததாலும், விஷங்கள் தீண்டி வேதனைகள் விலகியதாலும், பிரார்த்தனையைச் செலுத்தும் கடமை மேற்கொண்டு

அருமையாய்ப் போற்றிவளர்த்த அழகிய கேசத்தை பெண்டிர்முதல் ஆண், சிசு, அத்தனைபேர்களும் முடிசெலுத்தி சுவாமியின் சந்நிதி முன்னின்று "நாகநாதர் நீயே கதி" என்று **அவன்** நாமத்தை உச்சரித்து மித மிஞ்சிய அன்புப் பெருக்கால் தன்னையே மறந்து தண்டனிட்டு நிற்கும் மக்களின் பக்தியை, தெய்வ நம்பிக்கையை ஆர்வத்தை பார்த்த ஆனந்தப் பரவசம் இந்நூலை வெளியிட எனக்கு ஊக்கமளித்தது.

வாழ்க்கையில் குறுக்கிடும் எத்தகைய இடர்களையும் இலகுவில் அகற்றுதற்கு ஏற்ற சாதனம் தெய்வபலம் ஒன்றுதான் என்ற உண்மையை அறிந்து சகல பிணிகளையும் நினைத்த மாத்திரத்தில் நீக்கும் நிகரற்ற அருமருந்து **அவன்** என்று மனதில் பதித்து திரிகரண சுத்தியுடன் நாகநாதாவென நாமஞ்சொல்லி வாழும் நம் மக்கள் அனைவருக்கும் நயினர் கோவில் பூரண வரலாற்றுச் சுருக்கம் மேற்போக்காகவாவது ஓரளவு தெரியவேணுமென்ற கருத்தோடு இச்சேவை ஏற்க நேரிட்டது. மகத்துவம் மிகுந்த இந்த க்ஷேத்திரத்தின் மகிமைகளை, தெய்வவழிபாட்டில் சதா சிந்தையைச் செலுத்திப் பஞ்சாக்ஷர ஜெபம்செய்து பரமன் திருவிளையாடல்களைப் புராணங்கள் மூலம் படித்தறிந்த பெரியோர்களின் வாயிலாகக் கேட்டுத் தெரிந்த இப்புனித வரலாற்றைக்கூறும் இச்சிறு நூலில் குறைகள் ஏதேனுமிருந்தால் இந்நூற்கண்புகும் அறிவிற்சிறந்த பெரியோர்கள் அவைகளை நீக்கி சத்கைங்கர்யமான நோக்கமென என் சேவையை ஏற்று ஆதரவளிக்க வேண்டுகின்றேன்.

அன்பே சிவம். அவனே அகிலம்.

**K. B. சுப்ரமண்யன்,**
இராமநாதபுரம்.

# புராணம் புவியிற்போந்த விதம்.

4559

நீர் நில ஆகாயங்கொண்ட பூப்பரப்பு முழுதும் புலனுக் கெட்டாமல் நெளியும் புழு பூச்சிமுதல் புகழப்படும் மனித வர்க்கம் ஈறாக உள்ள லக்ஷோபலக்ஷம் ஜீவராசிகளனைத்தையும் ஆக்கி, ஊக்கி, அழிக்கும் முத்தொழில் மூர்த்திகளில் முழு முதற் கடவுளாய் கலியுக வரதனாய் அணுவிற்குள் அணுவாகவும், அங்கு இங்கு என்றில்லாதபடி அண்டசராசரமனைத்தும் நிறைந்து அகண்ட பரிபூரணனாக காக்ஷியளிக்கும் கருணாமூர்த்தி, சர்வலோக சரண்யன், சாக்ஷாத் சிவபெருமான் கைலைப்பதியிலே லோகமாதாவாகிய பார்வதி யம்மையாருக்குத் திருமருதூரெனும் நயினார் கோவில் க்ஷேத்திர வரலாற்றைத் திருவாய் மலர்ந்தருள, அதைக்கேட்ட அம்மையார் கலைமகளான சரஸ்வதிதேவிக்குக்கூற, பிறகு வழிவழியாக பிரஹஸ்பதி, அத்திரி, துர்வாஸர், கௌதமர், பராசர், வியாஸர் முதலிய மகரிஷிகள், முனிவர்கள் முதலானோர் ஒருவர்பின் ஒருவராய்ச் சொல்லக்கேட்டு முடிவில் சூத முனிவர் பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய ஆக்கினேய புராணப் பகுதியாக இடம்பெற்ற இந்த திருமருதூர் ஸ்தலபுராண மகிமைகளையும், விசேஷங்களையும் பூலோக மெங்கணுமறியும் நோக்கோடு தபசிரேஷ்டர்களான நைமிசாரண்ய வாசிகளுக்கு பக்தி விநயத்துடன் தெரிவிக்கிறார். மகத்துவம் நிறைந்த இவ்வரலாறு மனிதகுல உய்விற்கு மகா பொக்கிஷமாக மானிலத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

# மருதவன உற்பத்தி.

நயினார் கோவில் என்று வழங்கப்படும் இப்புண்ணிய ஸ்தலம் தேவர்களுக்கென சிருஷ்டிக்கப்பட்ட திவ்யச் க்ஷேத்திரமாகும். சிவபெருமான் திருவிளையாடல்களின் மகிமைகளுக் குட்பட்ட காரணம்பற்றி இப்பதிக்கு இருபத்தெட்டுப் பெயர்களுண்டாயது. ஆதியில் அமைந்த புனிதப் பெயர் மருதவன மென்பதாகும். சர்வேஸ்வரனை சிவபெருமானை பூஜிக்க தேவர்கள் தங்கள் நித்ய கர்மானுஷ்ட கைங்கர்யத்திற்கு உகந்த மலர்களைக் கொய்வதற்காக அதியற்புதமான ஓர் மலர்ச்சோலையை பிரம்மா பூலோகத்தில் இப் புண்ணிய ஸ்தலத்தில் உண்டாக்கினார் என்பது வேத புராண வாய்மொழி. இச்சோலை மருத மரங்கள் நிறைந்து காக்ஷியளித்ததால் இதற்கு மருதவனமென்று பெயர்வரக் காரணமாயிற்று. தேவர்களாலும் விவரிக்கமுடியா வனப்புமிகுந்து சகலவித புண்ணிய விருக்ஷங்களாலும், மணமிகும் மலர் செடி கொடிகளாலும் தேவாம்சம் நிறைந்து சிறப்புடன் விளங்கிய இக்கற்பகச் சோலையின் நடுவே சிவபெருமான் கோடி சூர்யப்பிரகாசமுள்ள சுயம்புவாய் முளைத்தெழுந்த திருக்காக்ஷியை தேவர்கள் கண்ணுற்றுத் திருவருள் பெற்றார்கள். சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவன் க்ஷேத்திர எல்லையை வகுத்து சிவபெருமானுக்குத் திருச் சந்நிதியையும், ஆயிரக்கால் மண்டபத்தையும் அதியற்புதமா யமைத்து வைத்தான். இத்தனை மகிமைகளுக்குட்பட்ட இம்மருதவனம் பூலோகத்தில் ஓர் தெய்வீக உற்பத்தியாகும்.

## 3

# க்ஷேத்திர நிர்மாணம்.

---

பூலோகத்தை பிரம்மா படைத்ததும் அதைத் தாங்குதற்கு தகுதியுடைய ஆற்றல் அனந்தன் எனும் ஆதிசேடனால் கூடுமென அறிந்து அப்பணியை அவனுக்கீந்தான். ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன் சகல வேதாகம இதிகாச புராணங்களை முறையே கற்று சகலகலா வல்லவனென தேவர்களும் புகழ்வார்களென்றாலும் யான் எனதென்னும் இருவினை அகம்பாவச் சுழலினின்றும் நீக்கமுற்றானில்லை. வைராக்கியத்தால் வணங்கிப் பெறும் வரத்திற்கும் வரையுண்டு என்று அறிந்தானில்லை. இரும்பின் சுபாவம் எப்பொழுதும் கடினமென்றறிந்தும், பயிற்சியால் வலிமைகொண்ட தன்முஷ்டியால் விளைவை மதியாமல் இரும்பையே தாக்கி முடிவில் இடர்க்குள்ளாகும் தன்மையைப்போல, அடைந்த சித்திகளுடன் நிற்கவில்லை ஆதிசேடன் இந்நிலையிலிருந்த எத்தனையோ தேவர்களும், அசுரர்களும் ஆணவத்தால் அழிந்திருக்கிறார்கள். அதில் ராவணனும் ஒருவன். ராவணன் பிரம்மனுக்குக் கொள்ளுப்பேரனவான். ராவணேஸ்வரன் என்னும் ஈஸ்வரப் பட்டம்பெற்ற பெரும் பெயருடையவன். ஆயிரம் வேதங்களையும் அறவே படித்தறிந்தவன். புவிநடுங்கும் புஜபல பராக்கிரமமுடையவன். அஷ்டமா சித்திகள் அனைத்தையும் பெற்ற முற்றிய சிவபக்தன். இவைகளுடன் நில்லாமல் இன்னுமறிய சாதனைகளைச்செய்து சித்திபெற்று சிவனுக்குச் சமமாக வரவேண்டும் மென்ற பேராசையால் ஏனைய எந்த சக்தியாலும் அசைக்கமுடியாத கைலாயமலையை இலங்கைக்கு எடுத்துச்செல்லும் எண்ணத்துடன் கைலையைப் பெயர்க்கும் முயற்சியில் இடையில் அகப்பட்டுக்கொண்டு வருந்தி முடிவில் மீளும்வழி இது எனக்கண்டு தன் சிரத்தையும் கரங்களையும் முறித்தெடுத்து தந்தி எற்றி நாதமீட்டி பஞ்சாக்ஷர முச்சரித்து பரமனைக்குறித்துப் பரவசத்துடன் சங்கராபரண கீதம் பாடினன். பரமனும்பார்த்து மகிழ்ந்தார் இந்த விநோதத்தை. கல்லாலும், வில்லாலும் கால்செருப்பாலும் அடிபட்டு அடியார்க்கு இரங்கி அபயமளிக்கும் அண்ணல், ஆணவத்தின் பலன் இதுவென

அறிவித்து ராவணனுக்கு அபயம் தந்து ரக்ஷித்தார். ஆயிரம் வேதங்களைப் பயின்றும் பலனின்றி முடிவில் மாயைக்குள் சிக்கி மடிந்து மறைந்தான் அந்த ராவணேஸ்வரன்.

சன்மார்க்கப் படிகளேறி சாஸ்வதப் பதவியடைவதைவிட்டு தன்மார்க்கப் படிகளிலே தட்டுத்தடுமாறி தலைகீழ் வீழ்ந்துழல்வது போல ஆதிசேடனும் ஆதிப்பொதுமறை நாதமான ஓம் எனும் பிரணவத்தின் உண்மைப் பொருளறிய மறந்து, மாயை மேலோங்க, மும்மலப்பகைக் கடிமையாக இருக்கிறான். லோக சம்ரக்ஷண விதி வில்காமலிருக்க, பூலோகப் பொருப்பேற்ற ஆதிசேடன் முதலில் மாயையிலிருந்து விடுபட வேண்டுமெனத் திருவுளங்கொண்ட சிவபெருமான் உமாதேவியாருடன் காளைவாஹனமேறி கணங்கள் புடைசூழ ஆதிசேடன்முன் காக்ஷியளிக்கிறார். எதிர்பாராமல் எம்பெருமானின் பிரத்தியக்ஷத்தைத் தெரிசித்த ஆதிசேடனுக்கு பிரமை உண்டாகி தன்னை மறந்து மஹாதேவா, அரஹரா; சம்போ கங்காதரா என்று பக்திப்பரவசங்கொண்டு பரமனைத் துதிக்கிறான். மாயை மறைய ஆரம்பிக்கிறது. அரனார் பாதங்களில் அடிபணிந்து உண்மைப் பொருளை இன்னதென்றறியாமல் இதுகாலம் மனதை மாயையில் பதித்த மகா பாவிநான் என்று கதறி, புரிந்த பாவங்களுக்குப் பிராயச்சித்தமீந்து ரக்ஷித்து ஞானமூட்டி நற்கதிகாட்டவேணுமென்று அரனார் திருவடிகளில் வீழ்ந்தழுகிறான். ஆதிசேடனின் அசம்பாவம் அடங்கி விட்டதென்றறிந்த அகிலநாயகன் அவன்பாலிரங்கி அன்பைப் பாராட்டி, "பூலோகத்தில் சிருஷ்டி செய்யப்பட்டிருக்கும் புனிதஸ்தலமான மருதவனத்தில் சின்னாள் தங்கி மும்பலபகைநீக்கி, அகங்காரமகற்றி நியமநிஷ்டை தவறாது தினமும் எம்மைப் பூஜிப்பாயானால் நாம் அங்கே நாகலிங்கம் என்ற நாமத்தில் தோன்றி உனக்கு ஞானமூட்டுவோமெனச் சொல்லி, அஷ்டமாசித்திகளடையும் மார்க்கங்களையும் ஆதிசேடனுக்கீந்து விடைமீதமர்ந்து விரைந்தேகினார் எம்பெருமான். அன்று முதல் ஆதிசேடன் அதிவைராக்கிய பக்தனாய் பரமனைப் பூஜிக்கத் தொடங்கலானான். ஆயிரம் தலைகளுடன் பூலோகத்திலுள்ள மருதவனத்திற்குச் சென்றால் மனிதவர்க்கமஞ்சுமென நினைத்து ஏற்கனவே பெற்றுள்ள சித்திகளின் உதவியால் தன்னைப்போலவே மற்றொரு

ஆதிசேட உருவத்தை உண்டாக்கி பூலோகப்பொருப்பை அன்னுனிடம் ஒப்படைத்துவிட்டு பூலோகமேகண்டு வியக்கும் பொன்மேனிகொண்ட அந்தணனுகமாறி மருதவனம் சென்ருன். தேவாம்சமாய்விளங்கும் மருதவனமுழுவதிலும மகாதேவனின் திவ்யரூபம் பிரகாசிப்பதைப் பார்த்து மட்டற்ற மகிழ்வெய்தினன். சுற்றிலும் பார்க்கிருன். அங்கே ஓர் வில்மரத்தடியில் கோடி சூர்யப் பிரகாசமுள்ள சுயம்புவடிவம் ஆயிரத்தெட்டுக் கலைகள்வீச முளைத்தெழுந் தருளியிருக்கும் கண்கொள்ளாக் காக்ஷியைக் காண்கிருன். பக்திப்பெருக்கெடுக்கப் பெரும் திருப்பணியில் உடனே ஈடுபட்டு காண்பதற்கரிதான கற்பக்கிரஹம், மண்டபம் பிரகாரம் கோபுரம், கொடிமரங்கள், தேர் முதலியவைகளை நொடிப்பொழுதில் அமைத்து சுவாமி நாகநாதருக்கும் அம்பிகை அழகியநாயகிக்கும் சுவர்ண பீட திருச்சந்நிதிகளை அதியற்புதமாயுண்டாக்கி முத்து, பவளம், மாணிக்கம், மரகதம், வைடூரியம், கோமேதகம், இந்திரநீலம், புஷ்பராகம், பச்சை முதலிய நவரத்தினங்களாலாகிய சுவர்ணலங்கார ஆபரணுதிகள், கிரீடங்கள், கும்பங்கள், பகவான் பவனிக்கேற்ற வாகனுதிகள் முதலியவைகளைச் க்ஷேத்திர இலக்கணப்படி சமைத்து ஐயன் திருவடியே தஞ்சமென்று எத்தனையோ சதுர்யுக காலங்களாக ஈஸ்வரதியானத்திலே தன் சிந்தையைச் செலுத்தித் திருத்தொண்டு செய்துவரலானுன்.

ஆதிசேடனின் பக்தி வைராக்கியத்தையும் மனுேதிடத்தையும் பார்த்த பகவான் அவனுக்கு ஞானுேபதேசம் செய்து நற்கதியளிக்கும் காரணமாக ஒருநாள் சிவபெருமான் அழகிய அந்தண உருவில் ஞானதேசிக நம்பியாரென்னும் நாமத்துடன் மருதூரில் ஆதிசேடனுக்கு முன்வந்து நிற்க, பிராமணுக வந்திருப்பவர்தான் தன் குருநாதனுன பரமன், எம்பிரான், சிவபெருமான் எனத் தெரிந்து அண்ணலின் திருத்தாள்களில் வீழ்ந்து வணங்குகிருன். சிவபெருமான் அவன்பாலிரங்கி தான் குரு ஸ்தானத்திலிருந்தே சீடனுன சேடனுக்கு ஞானுேபதேசம் செய்து பதி, பசு, பாசம் என்று சொல்லப்படும் முப்பொருளின் தத்துவத்தை முறையே உணர்த்துகிருர். ஞானம் பெற்ற ஆதிசேடனும் நற்பேரடைகிருன்.

இவ்விதமான பெருமைகளுக்கு ஆதாரமாக ஆதிசேடனால் இந்த க்ஷேத்திரம் நிர்மாணிக்கப்பட்டதும், நாகரூபத்திலிருந்த ஆதிசேடனுக்கு பரமன் நாதனாய் அமர்ந்து ஞானோபதேசம் செய்வித்த காரணத்தால் நாகநாதர் என எம்பெருமானுக்கு திருநாமமேற்பட்டதென்பதும் புராணக்கூற்று.

---

# தெய்வச் சிறப்புகள்.

நம் தேசத்தில் சிவபெருமான் திருவிளையாடல்களைக் குறிக்கும் சிவஸ்தலங்கள் ஆயிரத்தெட்டென்றும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே சிறப்புக்களையும் சம்பவங்களையும் மகத்துவங்களாக விவரித்துச் சொல்லும் ஸ்தலபுராணங்களு முண்டாகியுள்ளது. முக்கியமாக முச்சிறப்புக்களையும் கொண்ட க்ஷேத்திரங்களுள் மருதவன மென்று கூறப்படும் இந்த நயினார்கோவில் அச்சிறப்புக்கள் அனைத்தும் நிறைந்து தேவாம்சங்கள் பொருந்தி விளங்கும் தெய்வத்திருத்தலமாகும். தலவிசேடம், தீர்த்தவிசேடம், மூர்த்திவிசேடமென்பதாகி மூன்று சிறப்புக்களிலும் முறையே ஒவ்வொன்றும் வர்ணிக்க இயலாத அளவில் திருவருள் சுரந்த சிவசம்பவங்கள் நிறைந்துள்ளது.

---

# ஸ்தல விசேடம்.

பாரதப்பொன்னாடு எனப் புகழப்படும் நம் நாட்டிலே பரமனுக்குகந்ததென பிரமன் உருவாக்கிய இந்த மருதவனம் மகத்வம் நிறைந்த புண்ணியஸ்தலம் என்பது ஒன்றே இத்தல விசேடத்தைக் குறிக்கத்தக்க சான்றாகும். மேலும் சிறப்புகள் செறிந்தோங்கிய இப்புனிதஸ்தலம், தேவர்களுக்கு முக்தியளித்த சிறிய சுவர்க்கமென புராணங்கள் புகழும் சம்பவங்கள் பலஉள. அவற்றுள் முதன்மையானது மருதவனம் வில்வவனமாக மாறிய வைபவ வரலாறு தலத்திற்குத் தனிப்பெருமை யளிக்கவல்லது.

மானிலத்தை மயன்படைத்த நாள்தொட்டு மாயை எனும் பேயுடன் மனிதகுலம் ஒட்டி உறவாடத் தொடங்கியது. மனிதவர்க்கம் பெற்றுள்ள விசேஷ அறிவு விபரீதத்தில் விளைகின்றனவா வென்பதைச் சோதித்தறிய பகவான் ஏற்படுத்திய பகுத்தறிவுப் பரீக்ஷை யாகும் இது. மனித இனத்தோடு இந்தமாயை நின்றுவிடவில்லை. மாக்களிலுயர்தோராகிய தேவர்களையும் தவத்திற் சிறந்தோராகிய முனிவர்களையும் இந்த மாயைபற்ற, புலனடக்கும் நிலைமாறி புறவழி சென்று அவதிக்குள்ளானார்களென்றால் கேவலம் மனிதப்பூண்டு எம்மாத்திரம். எத்தனையோ பிர்மகற்ப காலங்களுக்குமுன் சத்ய லோகத்திலுள்ள தவ சிரேஷ்டர்களான முனிவர்கள் மாதவங்கள் பல செய்தும் மாயையிலிருந்து மீளும் மார்க்கமறியாது வருந்தி முடிவில் படைப்பிற்கதிபதியான பிரமனிடம் சென்று யோனியிற் சார்ந்து பிறந்து மாயைக்குட்பட்டு பாபச்செயல் பல புரிந்து பவவினைதொடர மீண்டும் பிறந்து பிறந்து அலுக்கும் மீளாவினைக்குள் ஆளாகும் எங்களுக்கு பிறவிப்பிணி யகற்றிப் பேரின்பநிலை எய்தும் மார்க்க மருளிக் காப்பாற்ற வேணுமென மன்றாடினார்கள். முனிவர்களின் நிலையறிந்த மயனு மவர்பாலிரங்கி அண்டங்கள் அனைத்தையும் ரக்ஷிக்கும் சர்வேஸ்வரனை சிவபெருமான், அகிலமெலா மொளிவீசும் ஆயிரத்தெட்டுக் கலைகளுடன் கூடிய சுயம்புவாய், பூலோகத்தில் அதியற்புதச் சோலையாயமைந்த மருதவனத்தில் முளைத்தெழுந்தருளி யுள்ளதையும், லோகசிருஷ்டிகளிலே காணப்படும் பொருள்களில், பாபங்களுக்காளாகாமலும் பவவினைப்பற்றிப் பாழாகாமலும் பகவானின் பாதார விந்தங்களிலே படிந்து, சிந்தையைச் சிதற விடாமல் சிவமேசகலமுமென்று ஐம்புலனடக்கி, ஐந்தெழுத்தை ஆயிரத்தெட்டு உருவில் அகில நாயகனின் நாமத்தை உச்சரித்து சிவார்ச்சனை ஜெபம் செய்யும் சிவபக்தர்களின் திருக்கரங்களில்படும் சிவபத்ரபுஷ்பமாகிய வில்வம் சிவபெருமான் திருமேனியைத் தீண்டும் பாக்யத்தைப் பெறுவதால், பூலோக சொர்க்கமெனும் மருதவனத்தில் 'வில்வமரங்களாக முளைத்தால் பவவினை தொடராமல் பரமனின் திருவடிகளில் நித்ய சாஸ்வதநிலையடையலாமெனப்பகர, அவ்வாறே முனிவர்களனைவரும் புண்ணிய தருக்களான வில்வமரங்களாக மருதவனத்தில் முளைத்து பகவத் கைங்கர்த்திற்கு பத்ரபுஷ்ப மீந்து மப்பதியிலே

ஜென்ம சாபல்யமுற்றனர் முனிவர்கள் என்பதால் தலவிசேஷம் தனிச்சிறப்புடையதாகிறது. மருதவனமென்று கூறப்படும் இத்தலம் வில்வவனமாக மாறியதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

---

## தீர்த்தம்.

இத்தலத்தில் எத்தனையோ புண்ணிய தீர்த்தங்களேற்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு மகிமைக் குட்பட்டதாய் அமைந்தன வென்று புராணங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவைகளுள் முக்யத்வம் வாய்ந்தது மயன் நிருவிய ஞான தீர்த்தமும், ஆதிசேடனமைத்த நாகதட தீர்த்தமு மாகும். மலைமகள், கலைமகள், மலர் மகளெனத் துதிக்கப்படும் மகாசக்திகளான உமாதேவி, சரஸ்வதி, இலக்குமி இம்மூவரும் தங்கள் தங்கள் பெயரால் கவுரி தீர்த்தமெனவும், வாணிதீர்த்தமெனவும், கமல தீர்த்தமெனவும் முறையே உண்டுபண்ணி அவைகளில் நீராடி நற்றவங்களியற்றி சிவபெருமான் திருவருள் பெற்றூர்களெனவும், தேவலோக சிரேஷ்டர்களும், கந்தர்வலோக வாசிகளுமான இந்திரன், இயமன், குபேரன், வருணன், வாயு, அக்னி, நிருதி முதலானோர்கள் வினையின் பயனுல் அகங்காரத்தால் ஸ்தானமிழந்து பூலோகவாசிகளாக மாறும் சாபம் பெற்றூர்கள். சாபவிமோசன மார்க்கமாக இறுதியில் மருதவனம் வந்து அருந்தவங்கள் பல செய்து அவரவர் பெயர்களில் தனித் தனியாக தீர்த்தங்களை உண்டாக்கி அதில் மூழ்கி வினையகன்று பூர்வரூபம் பெற்றுத் தேவலோகம் போய்ச் சேர்ந்தார்களென்பது புராணநூற்றுணிபு. இன்னும் இதைப்போல எத்தனையோ தீர்த்தங்கள் இத்தலத்தில் ஆதியில் அமைந்திருந்தன வென்பதும் அவைகளில் இன்று காணப்படும் ஒன்றிரண்டைத் தவிர மற்றவைகள் காலப் போக்கில் மறைந்துவிட்டன வென்பது கற்றறிந்தோர் கருத்து. மேலே காட்டியுள்ள ஞானதீர்த்தமென்பது பிரசித்திபெற்று சந்நிதி வாயிலின் மேற்றிசையில் இப்பொழுதும் விளங்கிவருகிறது. இந்த

ஞான தீர்த்ததிற்குள் தான் மேற்சொல்லிய மகாசக்திகளும் தேவர்களு மான இருபத்தைந்து பேர்கள் தனித்தனியே தீர்த்தமுண்டாக்கியதில் நீராடி நற்பேறு பெற்றார்களென்று கூறுவதுமுண்டு. இப்படியாக எத்தனையோ தீர்த்தங்கள் இத்தலத்திலேற்பட்டு தனித்தனிச் சிறப்பைக் கொண்ட சம்பவங்கள் கொண்டுள்ளதாய் விளங்கின. அவ்வைபவங்களனைத்தையும் விவரிப்பதற்கு இவ்வரலாற்றுச் சுருக்கம் குறுகியுள்ளதால் குறிப்பாக ஒன்றிரண்டை மட்டும் சற்று விளக்க இடமேற்பட்டது.

அதாவது பரமபக்தனான மார்க்கண்டனை ரக்ஷிக்க சிவபெருமான் இயமனைக் காலாலுதைத்துக் கொன்றான். பூபாரப் பொருப்பை பூமிதேவி ஏற்க முடிவில் பாரம் தாங்கமாட்டாது பரமனிடம் சென்று முறையிட்டாள். உடனே சிவபெருமான் சிவனடியார் என்றுகூட மார்க்கண்டனை மதியாத செருக்கினால் இறந்து சென்ற இடமனை எழுப்பி, பூலோகத்தில் திருமருதூ ரென்னும் ஸ்தலத்தில் சிலகாலமிருந்து சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து அவன் பெயரால் ஓர் தீர்த்தமுண்டுபண்ணி அதில் மூழ்கி வந்தால் பழைய உருப்பெறும் பாக்யம் கிடைக்குமெனப் பகர, அங்ஙனமே மானிட உருவில் இயமன் மருதவனம்சென்று மருதவனத்தின் மேற்றிசையின் எல்லைக்கோடான வைகையாற்றின் வடகரையி லமர்ந்து சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து முடிவில் மருதூரீசனின் சன்னிதியில் வந்து வணங்கி இமயதீர்த்த மென்றொன் றுண்டாக்கி யதில் மூழ்கி நற்கதியடைந்தான். இயமன் ஆதியில் பிரதிஷ்டை செய்த இந்த வைகைநதியின் வடகரைக்கு இயமனீச்வரம் என்ற பெயர் வரலாயிற்று. மருதவனத்தில் உற்பத்தியான இமயதீர்த்தம் இவ்வாறு மகத்துவம் நிறைந்ததாயிற்று.

இதைப்போலவே குபேரதீர்த்தமும் சிறப்புடையதாய் விளங்கின. எப்படியெனில், வசிட்டர் முதலான சப்தரிஷிகள் சிவ க்ஷேத்திரங்களனைத்தையும் தரிசித்துவிட்டு முடிவில் குபேரபட்டணம் வந்து தங்கியிருந்தார்கள். சப்தரிஷிகள் குபேரபட்டிணத்திற்கு வந்து எத்தனையோ நாட்கள் தங்கியும் அவர்களைத் தரிசிக்க முனைய வில்லை அநதக்குபேரன். அதோடு நில்லாமல் செல்வாதிபதியான

தன்னைவந்து ரிஷிகள் காணவில்லையே என அகம்பாவமுங் கொண்டான். செல்வச் செருக்கேறிய குபேரன் ஆடம்பர அலங் காரத்துடன் விருதுகள் புடைசூழ பட்டண வீதியில் பவனி வரும்பொழுது தற்செயலாய் சந்தித்த சப்தரிஷிகளைப் பார்த்து தன் பட்டணத்தில் இத்தனைநாள் தங்கியிருந்த ரிஷிகள் இதுவரை என் தன்னைவந்து காணவில்லை என்று கர்வத்துடன் வினவுகிறான். ரிஷி சிரேஷ்டரான வசிஷ்டர் சினங்கொண்டு தான்என்ற அகங்காரத்தால் தங்களை மதியாமல் இழிவுபடுத்திய குபேரன் தரித்திரனாகக்கடவது என்று சபிக்கிறார். அக்கணமே குபேரன் அணிந்திருந்த ஆபரணாதி கள் யாவும் இரும்பாக மாறி, பவனிவந்த வாகனங்கள் மாயமாய் மறைந்தன. பரிதாப நிலைக்குள்ளான குபேரனை மற்ற ஆறு ரிஷி களும் பார்த்து அவன்மேலிரக்கங்கொண்டு அவனுக்கு சாபவிமோசன மளிக்கவேண்டுமென வசிட்டரை வேண்டினார்கள். குபேரனும் தன் நிலையுணர்ந்து தான் ஆணவத்தால் செய்த பிழையைப் பொறுத்து ரக்ஷிக்க வேண்டுமென முனிவர்முன் வருந்துகின்றான். முனிவரும் முடிவில் அவன்பாலிரங்கி அவன் கர்வம்நீங்க, பூலோகத்தில் பாண்டியநாட்டில் தேவ உற்பத்தியாய்த் தோன்றியுள்ள திருமருது ரெனும் புண்ணியஸ்தலத்தில் மானிட உறுப்பெற்று ஒரு வருடகாலம் சிவஜெபம் செய்து அவனது பெயரால் ஒரு தீர்த்தமுண்டாக்கி அதில் மூழ்கினால் இழந்த செல்வங்களை மீண்டும் பெறுவானென்று சொல்லக்கேட்ட குபேரன் அவ்விதமே மானிட உருவில் மருதவனம் சென்று ஈஸ்வர தியானத்திலீடுபட்டு அவன்பெயரில் தீர்த்த முண்டாக்கி, மூழ்கி முன்னுருவம் பெற்று நற்கதியடைந்ததால் அவனேற்படுத்திய தீர்த்தம் மிக மகிமையுடையதாயிற்று. இதுபோலவே இத்தலத்தில், இந்திரன், வருணன், வாயு, அக்னி முதலியோர்களும் தங்களின் ஆணவமகன்று நற்கதிபெற்ற காரணத்தால் தீர்த்தங்களை முறையே உண்டுபண்ணி மீண்டும் தேவலோக மடைந்தார்களென்பதும், இப்பேற்பட்ட தீர்த்தங்களில் நீராடும் மற்றையோர்க்கும் பரமனருள் பரிபூரணமாக கிட்டுமென் பதுவும் தீர்த்தங்களின் சிறப்பாகும். அத்தனை தீர்த்தங்களின் பலனை ஒருங்கேயடைந்த ஓர் புண்ணிய தீர்த்தமாக ஞானதீர்த்தத்தை நன்மை பயக்க நமக்கு இப்பொழுதும் அளித்துள்ளார் நாகநாதர்.

# மூர்த்தி விசேடம்.

அண்டங்களனைத்திலும் நிறைந்து விளங்கும் சிவபெருமான் அதியற்புத சுயம்புவாய் இந்த மருதவனத்தில் காக்ஷியளித்ததைக் கண்ணுற்ற ஆதிசேடன் இக்கருணாமூர்த்தியின் சிறப்பை வர்ணிக்க தனக்குள்ள ஆயிரநாவும் போதவில்லையே என்று வருந்தினனென்றால் இம்மூர்த்தியின் பெருமை எத்தன்மையது என்பது நன்கு விளங்கும். எத்தனையோ யுகயுகாந்திரங்களுக்குமுன் இம்மருதவனம் ஏற்பட்டு அன்று முதல் இன்று வரையிலும் கீர்த்தி விளங்கும் மூர்த்தியாய் முளைத்தெழுந்து எண்ணறிய மகிமைகளை சகல லோகங்களும் வியக்கும் வண்ணம் திருச்செயலாற்றிய இம்மஹேஸ்வர மூர்த்தியின் சிறப்புவரை கடந்ததாகும். அதாவது ஆதிசேடனுக்குக் குன்ம நோயை அகற்றியும், அகத்திய முனிவரை பொதிய மலையிலிருக்கச் செய்து அவர் விருப்பப்படி சிவபெருமானின் திருமணக் காக்ஷியை அவருக்கு அளிக்க உமாதேவியை அழகிய நங்கையென நாகநம்பிக்கும் தேவநங்கைக்கும் வளர்ப்புப் புதல்வியாக்கி, பருவத்தில் திருமணம் புரிந்து அகத்திய முனிக்கு அருள்காக்ஷியளித்தும், மாணிபத்திர னெனும் கந்தர்வனுக்குக் காக்ஷிகொடுத்ததும், சிவராத்திரியன்று வேடனுக்கு காக்ஷியளித்து கைலாயஞ்சேரும்படி யருளியதும், காந்தருவஸ்திரீகளுக்கு காக்ஷிகொடுத்தும், முல்லாவின் மகளான ஊமையை வாய் பேசச்செய்தும், கண்ணில்லா தலைமலைகண்டதேவரை அந்தாதி பாடச்செய்து கண் கொண்டுத்தும், மேற்கு முகமாய் வீற்றிருந்து நாமதேவரின் சிவநாமகீதம் கேட்டு மகிழ்வெய்தியது முதலான பல அறிய சம்பவங்களுள் வசிஷ்டரின் மைந்தர்களான ஆயிர முனிவர்கள் சாபம் பெற்று மீண்டும் விமோசனமடைந்த சம்பவம் மூர்த்தியின் பெருமைக்கு முக்கியமாயிருப்பதால் அதை மட்டிலுமாவது சற்று விளக்கமாக இச்சிறு நூலில் காண்பிப்பது அவசியமாகும்.

பூலோகத்தில் கீர்த்தியுடன் அரசாட்சி செய்துவந்த சூர்ய வம்சத்தரசனான திரிசங்கு தன் குல குருவாகிய வசிஷ்டரை வணங்கி சகல பாக்யங்களையும் அனுபவித்து சலித்துவிட்ட தான் தன் பூத

உடலோடு சொர்க்கம் சேரும் மார்க்கமருளும்படி வேண்டினன். அதற்கு வசிஷ்டர் அவன் விருப்பம் நிறைவேறும் மார்க்கத்தையும், ஒரு வருட காலம்வரை விடாது யாகம் செய்யச்சொல்ல, அதை விட்டு ஒரேநாளில் சுவர்க்கபதவியடைய எண்ணி விஸ்வாமித்திரரிடம் போய், விஸ்வாமித்திரர் வல்லமையற்றவர் என்று வசிட்டர் கூறுவதாகச் சொல்கிறான். விஸ்வாமித்திரர் கோபங்கொண்டு தன்னை இப்படியும் ஒருவன் பழிப்பதாவென்று கடுமையான வேள்வி ஒன்றை ஆரம்பித்து வசிஷ்டர்களின் மைந்தர்களான ஆயிரம் முனிவர்களையும் அவ்வேள்விக்கு வரும்படி சொல்லியனுப்புகிறார். நீசனை சொர்க்கத் திற்கனுப்பத்துணியும் அந்த யாகத்திற்கு அவர்கள் வரமாட்டோம் என்று சொல்லிவிட்டதால் கோபங்கொண்ட விஸ்வாமித்திரர் அந்த ஆயிரம் முனிவர்களையும் புலையுண்ணும் வனவேடர்களாகக் கடவீர் என்று சாபமிட அவ்வாறே முனிவர்களாயிரவரும் வேடர்களாக மாறி வனம்வந்து சேர்ந்தனர். பிறகு விஸ்வாமித்திரர் தான் அடைந்துள்ள அஷ்டமாசித்திகளினுதவியால் யாகமுண்டாக்கி செய்யவேண்டிய முறைப்படி சகலமும் செய்து, தபோவலிமையினால் புஷ்பக விமானமொன்றை வரவழைத்து திரிசங்குவை அதிலமர்த்தி சொர்க்கமேகும்படி அனுப்புகிறார். ஒருமாத காலத்திற்குள் நீசனான திரிசங்கு சொர்க்கம் வருவதால் அதன் பெருமை குன்றிவிடுமெனப் பயந்த தேவர்கள் சொர்க்கவாசலையணுகிய திரிசங்குவை தலைகீழாய்த் தள்ளிவிட, திரிசங்கு நடுநடுங்கி, விஸ்வாமித்திர முனிக்கபயம் அபயமென அலறி தலைகீழ் வருகின்றான். அபயக் குரல் கேட்ட முனிவர் சினங்கொண்டு அங்கேயே நில் என்று சொல்லி திரிசங்கு நிற்குமிடத்திலே ஓர் தனி சொர்க்கமமைக்க முனைகிறார். உடனே பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஆகிய மூவரும் விஸ்வாமித்திரருக்கு காக்ஷியளித்து திரிசங்குவை சொர்க்கத்திற்கு அனுப்புவது தகுதி யில்லையென்றும், அவன் நிற்கும் அந்தரமே ஓர் தனி சொர்க்கமாகி நக்ஷத்திரமாக கடவான என்று சொல்ல, விஸ்வாமித்திரர் உணர்ந்து ஆயிர முனிவர்களுக்கும் சாபவிமோசனம் கேட்கிறார். ஆயிர முனிவர்களையும் அக்ரமமாய் சபித்ததால் விஸ்வாமித்திரர் தன் தபோவலிமையை இழக்கிறார். பிறகு வேடர்களாயிருக்கும் ஆயிரவர் களுக்கு ஞானம் புகட்டி நல்வழி காட்டுவோமென சொல்லி மறைந்துவிடுகிறார் சிவபெருமான்.

வேடர்களாய் வாழும் முனிவர்களின் கனவில் கருணைமூர்த்தி தோன்றவே மறுநாள் அனைவரும் வேட உருவம் நீங்கி மானிடராய் மருதவனத்தில் பன்னெடுங்காலம் பரமன் திருவடிச் சேவையி லீடுபட்டிருக்கிறார்கள். இப்படியிருக்கையில் ஒரு நாள் சிவபெருமான் அழகிய அந்தன வடிவந்தாங்கி மருதூரீசனின் சன்னிதியில் தோன்ற, குருநாதர் இவரே எனக்கண்டு வணங்கி ஞானோபதேசம் பெற்று நற்கதியடைந்து சாபவிமோசமேற்பட்டது. இவ்விதமாக இத்தலத்தில் மூர்த்தியின் விசேஷம் பெரிதும் அமைந்து அருள் விளங்குகிறது. இன்றளவும் மக்கள் கொண்டுள்ள தெய்வப்பற்றுதல் ஒன்றே இச்சிறப்புக்குச் சான்றாகும்.

முற்றும்.

ஸ்ரீ ராமநாதன் பிரஸ், இராமநாதபுரம்—52

ஸ்ரீ ராமநாதன் பிரஸ்,
இராஜாஸ் ஹைஸ்கூல் வீதி,
இராமநாதபுரம்.

* * *